**மினுவாங்கொட பிரதேச - சபை 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மினுவாங்கொட பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மினுவாங்கொட பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 42,275,685 ஆன மூலதன மானியங்கள் ஆண்டிற்கான வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான மாதிரி படிவங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலக்கம் 3.13 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் தொகுதியினுள் உள்ளடங்களியுள் தேறிய சொத்துக்கள் / மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்படாத மற்றும் கணக்குகள் காண்பிக்கப்படாத வெற்று அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திரண்ட நிதியத்தின் ரூபா 204,292,317 ஆன மீதியும், ரூபா 764,862,957 ஆன மூலதனத்திற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கு மற்றும் ரூபா 46,022,990 ஆன மூலதனத்திற்கு வெகுமதிகள் மூலமான பங்களிப்பு கணக்கின் மீதியும் முலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், வியாபார செலுத்த வேண்டியதாக குறிப்பு இலக்கம் 17 இன் கீழ் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் பொறுப்புகளாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான மாதிரி படிவங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான நியமங்களுக்கான விரிவான வழிமுறைகள் உள்ளடக்கப்பட்ட EG 6 பிரிவின் மாதிரிக்கமைய காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கலவில்லை. | | |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) விரிவான வருமானக் கூற்றின் ஏனைய விரிவான வருமானத்தை சீராக்கும் போது ஆண்டினுள்ளான மூலதன செலவின மானியங்களின் மிகை / பற்றாக்குறைக்கு இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியம் கழிக்கப்பட்டு எஞ்சிய மிகை / பற்றாக்குறைக்கு சேர்க்கப்பட்டு ஆண்டின் விரிவான வருமானம் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது மிகைக்கு ஆண்டுக்கான மொத்த மூலதன மானியங்கள் கழிக்கப்பட்டு இனங்காணப்பட்ட செலவின மானியங்கள் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காரணத்தால் ரூபா 113,186,756 இனால் மிகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.<br><br>(ஆ) மொத்த மூலதனச் செலவின மானியங்களில் ஆண்டின் வருமானத்திற்கு இனங்காணப்படாத மானியங்களின் பெறுமதி மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் / பற்றாக்குறைக்கு சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட வேண்டியதுடன், ரூபா 56,593,378 தொகையான அந்த பெறுமதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மொத்த பொறுப்புகளுக்கும் சேர்த்துக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்திராமையால் மூலதனம் மற்றும் மொத்த பொறுப்புகள் அந்த அளவினால் குறைத்துக் | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான மாதிரி படிவங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

காண்பிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த வருடத்தில் கைத்தொழில்களுக்காக 2108 நேர் ஊழிய மணித்தியாலங்களை ஈடுபடுத்துவதற்காக ரூபா 2,389,900 மற்றும் எதிர்காலத்தில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கற்ற ரூபா 18,736,393 ஆன கடன் கொடுத்தோர் ஒதுக்கங்களினுள் ரூபா 21,126,293 இனால் கடன் கொடுத்தோர் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தனர். | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான மாதிரி படிவங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இணையத்தள முறையிலான மென்பொருள் கட்டமைப்பிற்காக செலவழிக்கப்பட்ட ரூ.பா 2,390,000 தொகை சொத்துக்களாகக் கணக்கிடப்படுவதற்குப் பதிலாக செலவுகளாகக் கணக்கிடப்பட்டதால், மிகையானது அந்த அளவினால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2022 பேரேட்டு இலக்கம் 03 இன் மூலம் திருத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கின்றேன். | |
| (உ) | மீளாய்வாண்டின் வெளிவாரி மூலதன செலவினக் கொடுப்பனவு ரூபா 98,869,062 இனால் ரூபா 42,275,685 ஆன தொகை கிடைத்திருந்ததுடன், ரூபா 56,593,377 தொகை வியாபார கடன் பட்டோரான போதிலும், ரூபா 35,788,249 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 20,805,128 இனால் கடன் பட்டோர் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரியான மாதிரி படிவங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான 47 ஆதனங்கள் ரூபா 780,412 இற்கு வீதவரிக் கட்டணங்களை அறவிடல் பட்டியலிடலுக்கு உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அந்த அளவினால் வீதவரி நிலுவை மீதியானது | எதிர்காலத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | மீளாய்வாண்டின் போது 08 ஆதனங்களுக்கு உரிய ரூபா 523,243 ஆன வீதவரி நிலுவை மீதிகள் இருதடவைகள் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால், அந்த அளவினால் வீதவரி நிலுவை மீதியும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த ஆதனங்களை இனங்கண்டு கணினிக் கட்டமைப்பினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவிக்கின்றேன். | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 05 கணக்கு விடயங்களுக்குரிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கணக்கு மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 18,127,834 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் திருத்துகின்றேன். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.6.4 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் செலுத்தப்பட்ட ரூபா 784,907 ஆன முற்பண மீதியொன்று முற்பணக் கணக்கில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டதுடன், இதுவரையிலும் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது 15 வருடங்களை விஞ்சிய முற்பணமாகும். இதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (I) இலக்கம் 571(3) | (i) பொது சுகாதார பரிசோதகரின் தண்டப்பணமாக நீதிமன்றத்தினால் 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் சபைக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 291,557 ஆன தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) 2013 ஆம் ஆண்டின் போது ஆதனக் கம்பனியொன்றின் மூலம் ஆதனங்களின் மீகஸ்பிட்டிய எஸ்டேட் காணியின் நீர் வழங்கல் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 தொகை மற்றும் அந்த ஆண்டில் நில்பனாகொட ஏலக் காணியின் நீர்த்தாங்கியொன்றை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 தொகை உரிய பணிகளில் ஈடுபடுத்தப்படாது | இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | குறித்த பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 171,652,556 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,012,252,654 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமானம் சேகரிப்பிலான செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி பெறுமதியில் ரூபா 50,000 இனை விஞ்சியிருந்த 19 வீதவரி அலகுகளுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரிப் பெறுமதி ரூபா 1,904,843 ஆக காணப்பட்டது. | ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர்களால் அல்லது நிலுவை வருமானத்தினை சேகரிக்க முடியாத நிலையொன்று உருவாகியுள்ளதுடன், எதிர்காலத்தில் இயலுமான அளவில் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்கின்றேன். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட வாடகை நிலுவையினுள், கடை வாடகை மற்றும் குத்தகை வாடகை நிலுவை ஆகியவை முறையே ரூபா 201,280 தொகை மற்றும் ரூபா 700,333 ஆன போதிலும், அந்த கடை வாடகை நிலுவையில் ரூபா 10,000 மாத்திரமே மீளாய்வாண்டுக்கு உரியதாக அறவிடப்பட்டிருந்ததுடன், வரி நிலுவையிலிருந்து எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய நிலுவைகளும் எதிர்காலத்தில் வசூலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கடன் சபை அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையில் 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதி ரூபா 32,500,000 இற்கு 13 ஏக்கர்கள் 02 ரூட் 12.7 பேர்ச் பரப்பளவான மாபோதல கோனமடேவத்த காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் சுமார் 48000 தேங்காய் விளைச்சலொன்று கிடைப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளமையால், அதற்கமைய தேய்காயொன்றின் விலை ரூபா 60 ஆகவும் பறிக்கும் செலவினம் மாதமொன்றுக்கு ரூபா 8,000 படி கருத்திற்கொள்ளும் போது வருடாந்தம் ரூபா 2,784,000 ஆன வருமானம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும், 2021 ஆம் ஆண்டின் போது கிடைத்த வருமானம் ரூபா 591,130 ஆக காணப்படுவதுடன், கொள்வனவு செய்த ஆண்டு முதல் இதுவரையிலும் அந்த இலக்குகளை அண்மிப்பதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, காணியில் உள்ள பலா, கமுகு, மகோகனி, மில்ல போன்ற விலையுயர்ந்த மர வகைகள் இனங்காணப்பட்டு இலக்கமிடப்பட்டு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த காணியில் உள்ள விலை உயர்ந்த மரங்களை கண்டறிந்து விரிவான அறிக்கை தயார் செய்யுமாறு மபோதல துணை அலுவலக வருமான பரீட்சிப்பு உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டு அதற்கான பதிவடொன்று தயார் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன். | உற்பத்தித்திறனை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் மதிப்புமிக்க மர இனங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 நிறைவேற்றிய செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஏரியல் வர்க் ப்ளட்போர்ம் வாகனமொன்றை விநியோகிப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 16,500,000 தொகை தனியார் நிறுவனமொன்றின் பெயரில் கடன் கொடுத்தோர் ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அது பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கலவில்லைல. | நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக தாமதமானாலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | ஒப்பந்தம் செய்யப்பட்ட திட்டங்களை தாமதமின்றி நிறைவேற்ற வேண்டும். |

**3.3 செயற்திட்டங்களை தாமதித்து நிறைவேற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் நிதியங்களின் ஊடாக மஹாகம சபைக்கு உரிய காணியில் சனசமூக நிலையமொன்றை நிர்மாணிக்கும் கட்டம் I இற்காக, 2018 ஆம் ஆண்டின் போதும் ரூபா 499,817 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணப் பணிகள் 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் மேற்கொள்ளப்படாத காரணத்தால் ரூபா 499,817 ஆன ஆரம்ப செலவினம் விளைவற்ற செலவினமாக மாறியுள்ளது. | சபையின் அங்கீகாரத்தினை பெற்று கடன் கொடுத்தோரை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கின்றேன். | ஒதுக்கப்பட்ட பணத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |